[25th April 1960

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, we are now thinking of developing two neighbourhoods on the type of Thyagarayanagar which was developed some thirty years ago. One is in West Madras area between the Avadi Road-Integral Coach Factory and the Poonamallee High Road. That would be 1,000 to 1,200 acres. There is another neighbourhood which we want to develop and that is in North Madras, Vyasarpadi, where also we have acquired about 1,000 acres. When these two suburban townships come up, there may be some relief to the congestion in the city.

SRI A. VEDARATHNAM : வீடுகளுக்கு விண்ணப்பம் செய்கிறவர்கள் தங்களுக்கோ, உறவினர்களுக்கோ வீடுகள் இருப்பது கூடாது என்பதாக கனம் அமைச்சர் அவர்கள் தெவிரித்தார்கள். உறவினர்களுக்கு வீடு இருப்பது தவறா ? அவர்களுக்கு இடம் இல்லை என்ற காரணத்தால் விண்ணப்பம் செய்கிறார்கள். இதைக் கனம் அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : நெருங்கிய உறவினர் அதாவது கணவன் மனைவி, தகப்பனார், பிள்ளையாகவோ இருந்தால் சாதாரணமாகக் கொடுப்பதில்லை.

Houses for the employees of the Nellikuppam Sugar-Factory

* 800 *Q.*—SRI S. THANGAVELU : கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதில் அளிப்பாரா—

(அ) நெல்லிக்குப்பம் சர்க்கரை ஆலையில் வேலை செய்துவரும் ஆலைத் தொழிலாளர்களுக்கு கூட்டுறவு முறையில் வீடு கட்டும் திட்டம் ஏதேனும் இருக்கிறதா ?

(ஆ) அப்படியானால் எப்போது எடுத்துக்கொள்ளப்படும் ?

(இ) இல்லை என்றால், அதற்குக் காரணம் என்ன ?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*), (*b*) & (*c*) The workers of the East India Distilleries and Sugar Factory, Nellikuppam, organized a Co-operative Housing Society for the construction of houses for the workers under the Subsidised Industrial Housing Scheme. The Society formulated a project for the construction of houses at a cost of Rs. 6,300 each against the ceiling limit of Rs. 3,850 fixed by the Government of India. The project was dropped eventually, as it was not possible for the Society to construct houses within the ceiling cost, and for the workers to meet the extra cost.

MR. SPEAKER : இந்த நேரத்தில் ஒன்று ,சொல்ல வேண்டும். கேள்வி கேட்க விரும்பினால் இடத்தில் எழுந்து நின்று. கேள்வி போடுகிறேன் என்று சொல்ல வேண்டும். சும்மா இடத்தில் உட்கார்ந்து இருந்தாலோ அல்லது சபையை விட்டு வெளியே சென்றுவிட்டாலோ அவர் கேள்வி போட விரும்பவில்லை என்றுதான் எண்ணிக்கொள்ளக் கூடும்.

SRI S. THANGAVELU : அமைச்சர் அவர்கள் தயவு செய்து மேற்கூறிய பதிலைத் தமிழில் சொல்ல வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : நெல்லிக்குப்பம் சர்க்கரை ஆலையைச் சேர்ந்த தொழிலாளர்களுக்கு வீடு கட்டுவதற்கு ஒரு கோவாப்ரேடிவ் ஹவுசிங் சொசைடியை அமைத்து முயற்சி எடுத்துக்கொண்டார்கள். அவர்கள் போட்ட திட்டப்படி வீடு ஒன்றுக்கு 6,300 ரூபாய் செலவு ஆயிற்று. ஆனால் இந்திய சர்க்காரால் நிர்ணயிக்கப்பட்டு இருப்பது வீடு ஒன்றுக்கு 3,850 ரூபாய்தான். ஆகவே இதற்கு மேல் பணம் வேண்டி இருந்த காரணத்தினால் அவர்கள் அத்திட்டத்தைக் கைவிட்டுவிட்டார்கள்.